[முற்பகல் 9—20]

அரிசன நலப்பணிகளுக்குத் தனித்துறை.

*வினா எண். 854—திரு. வ. மு. சுப்பிரமணியன்; மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்பட அரிசன நலத்துறையை சமூக நலத்துறையிலிருந்து தனியாக பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) மாவட்டங்கள் அளவிலும், வருவாய்த்துறையிலிருந்து அரிசன நலத்துறையை பிரித்து தனித்து செயல்பட செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசன நலத்துறையை சமூக நலத்துறையிலிருந்து தனியாக பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

(ஆ) மாவட்டங்கள் அளவில் வருவாய்த்துறையிலிருந்து, அரிசன நலத்துறையை பிரித்து பல்வேறு நிலைகளில் நிரந்தர மாகப் பணியாற்றும் ஊழியர்களைக் கொண்ட தனித்துறையாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா, எண் 855-க்கும் அமைச்சர் பதில் அளித்து விடலாம்.

*வினா எண். 855—திரு. ரா. கிருஷ்ணன், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நலத்துறை பல்வேறு நிலைகளில் நிரந்தர மாகப் பணியாற்றும் ஊழியர்களைக் கொண்ட தனித்துறையாக மாற்றுவதற்கென ஏற்பாடுகளை செய்ய அரசு அனுமதித்துள் ளதா ?

(ஆ) ஆமெனில் ஊழியர்கள் எந்த அடிப்படையில் நிய மனம் செய்யப்படுவார்கள் ?

(இ) எப்போதிலிருந்து தனித்துறை ஊழியராகப் பணியாற் றத் தொடங்குவர் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசன நலத்துறையை பல்வேறு நிலைகளில் நிரந்தரமாக பணியாற்றும் ஊழியர்களைக் கொண்ட தனித்துறையாக மாற்றுவதற்கான

1979 ஏப்ரல் 27]

செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது. அதன்படி மாவட்ட அரிசன நல அலுவலர்கள் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் அரிசன நல இயக்குநரகத்தில் பணிபுரியும் ஊழியர்களை 7 : 4 : 4 என்ற விகிதத்தில் எடுத்துக்கொண்டு தனியான துறை துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

(ஆ) '' அ ''வில் குறிப்பிட்டபடி 7 : 4 : 4 என்ற விகிதாச்சாரத்தில் முறையே வருவாய்த்துறை, ஊரகவளர்சித்துறை, மற்றும் அரிசன நல இயக்குநரகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

(இ) ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து தனி துறையாக பணியாற்றத் தொடங்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்,

திரு. வ. மு. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டுமனை ஒதுக்கி வீடுகள் கட்டுகிற நேரத்தில், 1978–79க்கு, 1979 ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில்தான் பட்டியல் வெளியிடப்பட்டு இருக்கிறது. அதுபோலவே பல மானியங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கியுள்ளவை உரிய நேரத்தில் செலவழிக்கப்படாமல் அரசுக்கு திரும்ப அனுப்பப்பட்டு இருக்கிறது. இது இந்தத் துறையின் கையாலாகாததனத்தைக் காட்டுகிறது. ஆகவே, இந்தத்துறையை தனித்துறையாக்கி, தனி செயலகத்தை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு உரிய பதிலிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இதுவரை அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்கள் ரெவின்யூ துறையிலிருந்து வந்து பணியாற்றிக்கொண்டு இருந்தார்கள். ஆகவேதான் சில பல நேரங்களில் அரசின் திட்டங்களும், கேட்கிற அறிக்கைகளும் தாமதமாக வருகின்றன என்பதை அறிந்து அதற்காக இந்தத் துறையை ஒரு நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு நியமிக்க அரசு ஆணைகள் பிறப்பிக்கப்படவும், அந்த நிரந்தரப் பணியாளர்கள் ஜூன் முதல் தேதியில் இருந்து பணியாற்றவும் அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தத்துறையில் பணியாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். குறிப்பாக கோவில்பட்டி கோட்டத்தில் இரண்டு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் தான் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட

80 கி. மி. தூரத்திற்கு இந்த இரண்டு பேர் தான் போக வேண்டும். அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 2 என்ற அளவில் பிக்ஸட் டி.ஏ. தான் கொடுக்கிறார்கள். அப்படி இருந்தால் எப்படி சரிவர பணியாற்ற முடியும்? ஆகவே, தாசில்தார் எண்ணிக்கையையும் கூட்டி, ஒரு ஜீப் கொடுத்து, அதை செம்மையாக செயல்படவும், ஒதுக்கப்படுகிற பணத்தை முழுமையாக செலவு செய்யும் முறையிலும் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன: தலைவர் அவாகளே, இந்த 31 ஆண்டுகாலமாக இநதத துறைக்கு என்று நிரந்தரமான பணியாளர்கள் இல்லை. ஆகவே, முதலில் அதை நிரந்தரமாக்கவும், அதற்குப் பிறகு எந்தெந்த அலுவலகத்தில், எந்தெந்த வேலைக்கு பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு அதை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த அரிசன துறைக்கு பணியாற்ற வரும் அதிகாரிகள் ஏதோ பொழுது போக்கிற்காகவும், ட்ரெயினிங் எடுக்கிற மாதிரியும் வந்து உட்கார்ந்துவிட்டு, ஈ ஓட்டிக் கொண்டிருந்துவிட்டு போய்விடுகிறார்கள். ஆகவே, இந்தத் துறைக்கென்று தனி துறையை ஏற்படுத்தி, அந்த அரிசன மக்களுக்கு அந்தத் துறை பயன்படுகிற மாதிரி, அந்தத் துறையில் அரிசன அதிகாரிகளையே போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும் தாலுக்காவிற்கு ஒரு ஹெட் ஆபீஸ் அமைத்து, போன் வசதி வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவாகளே, மாணபுமிகு உறுப்பினர் இதுவரை ஈ ஓட்டிக் கொண்டு இருந்தார்கள் என்று சொன்னார்கள். அது கூடாது என்பதற்காகத்தான அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படுவார்களானால், கண்காணிக்கும் பொறுப்பு நெறியாளருக்கு வந்துவிடும். அவர்கள் வேகமாகப் பணியாற்றும் நிலைமை ஏற்படும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் இந்தக் காரியத்தை இந்த அரசாங்கம் செய்து கொண்டு இருக்கிறது. டெலிபோன் வசதி பற்றி சொன்னார்கள். இந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னால் தேவையான நிதிவசதி ஏற்பட்ட பிறகு அதுவும் பரிசீலிக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஓராண்டு காலமாகவே இந்தத் துறையைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்று அரிசன நலக் குழுவிலே விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே செயற் குறிப்பு இருக்கின்றது என்றெல்லாம் சொல்லப்படுகிறதே

1979 ஏப்ரல் 27]

நான் கேட்பது நிச்சயமாக அது ஜூன் மாதம் தனித்து இயங்குமா என்பதுதான். அப்படி தனித்து இயங்கினால்தான் அரிசன மக்களின் குறைகளைப் போக்க முடியும். இது தனித்து இயங்கப் போகிறது என்ற மகிழ்ச்சி எங்களுக்கெல்லாம் இருந்தாலும் அது மிக விரைவிலே ஜூன் மாதம் இயங்குமா என்பதை அறிய விரும்புகிறேன். செய்திக் குறிப்பு இருக்கிறது, உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றது என்றெல்லாம் சொல்வதை விட நிச்சயமாக அது ஜூன் மாதத்தில் நிறைவேறுகின்ற வகையிலே நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இதை நான் ஏன கேட்கிறேன் என்று சொன்னால் பல தடவை சொல்லியாகிவிட்டது. ஆகவே இது கட்டாயம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் சொன்னதை ஆணையாக இட்டிருக்கின்றது. தேவையான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஜூன் மாதத்திற்கு மேல் நிச்சயமாக துவக்கப்படும் என்பதைத்தான் பதிலிலேயே சொல்லி இருக்கிறேன். அதற்குப் பிறகு பணியாளர்களில் யார் யாரை எங்கே போடலாம், எப்படிப் பிரிக்கலாம் என்பதற்கான வேலை நடைபெறும். மாவட்ட நல அதிகாரிகள் ஜூன் மாதம் முதல் இந்தத் துறையைச் சார்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, தற்போது அரிசன நலத் துறையைப் பொறுத்தமட்டில் இரண்டு தாலுக்காக்களுக்கு ஒரு தாசில்தார் என்றுதான் இருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தாலுக்காவிற்கு ஒரு தாசில்தார் என்று பிறப்பிக்கப்பட்ட ஆணை இப்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே மீண்டும் தாலுக்காவிற்கு ஒரு தாசில்தார் என்ற அளவிலே நியமிப்பதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். இதற்காகத்தான் நான குறுகிய கால வினா ஒன்று கொடுத்திருந்தேன். ஆனால் இது வரையில் எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வெ. மு. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தத் துறையை மாவட்டங்கள் என்ற அளவிலே மட்டும் பிரித்தால் போதாது. தலைமைச் செயலகத்திலும் இந்தத் துறையை தனியாகப் பிரிக்க வேண்டும். அப்போதுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் சென்னைக்கு வந்து தங்கள் நிலைமைகள் பற்றி எடுத்துச் சொல்ல முடியும். ஏனென்றால் சாதாரணமாக அவர்களால்

சென்னைக்கு வந்து இங்குள்ள முறைகளைத் தெரிந்து அதன்படி உரிய அதிகாரிகளை அணுக முடியாதவர்களாக இருப்பதால் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று மீண்டும் தனித் துறையை ஏற்படுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாவட்ட அளவிலான அலுவலகங்கள் வட்ட அளவில் பணியாற்றுகின்ற தாசில்தார் அலுவலகங்களையும் ஆகிய எல்லாவற்றையுமே தனியாகப் பிரித்து இந்தத் துறைக்கு நிரந்தரப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின முடிவான ஆணை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மாவட்ட அரிசன நலத் துறையிலே வேலைகள் சீராக நடப்பதற்கு பலவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல உறுப்பினர்கள் கேட்ட கேள்வியை ஒட்டி பார்க்கின்றபோது ஐந்து தாலுக்காக்களுக்கும் சேர்ந்து ஒரு தாசில்தார்தான் இருக்கின்றார்கள் என்ற நிலைமை இருக்கின்றது. அதுமட்டுமல்ல. அவர்களுக்கு ஜீப்பும் கிடையாது, போன் வசதியும் கிடையாது, வேலைகளும் அதிகம். ஆகவே இரண்டு தாலுக்காவுக்கு ஒரு தாசில்தாரைப் போட்டு ஜீப்பும், போன் வசதியும் உடனடியாக ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தற்போது வட்ட அளவில் பணியாற்றுகின்ற தாசில்தார்களின் எண்ணிக்கை போதாது என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு தாசில்தார் நியமிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தும் ஆகும். அதுபற்றிய என்னுடைய கருத்தையும் எழுதி அனுப்பி அது இப்போது தீவிரமான பரிசிலனையில் இருக்கிறது. அதுவும் விரைவாக நடக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்பலாம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்தத் துறைக்கு வருகினற பணியாளர்கள் சற்று திறமை குறைவானவர்களாகவும், ஓய்வு பெறக் கூடிய நிலையில் இருப்பவர்களாகவும்தான் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் எந்த அடிப்படையில் இந்தத் துறைக்கு பணியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து ஒரு விதத்தில் நியாயம்தான் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் துறையில் பணியாற்றுவதற்கு இதற்கு முன்பு நியமிக்கப்பட்ட மாவட்ட நல அதிகாரிகள் போன்றவர்கள் ஒய்வு பெறும் வயது வந்த நேரத்திலேதான் இங்கே மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதைத் தவிர்த்து நல்ல இளைஞர்களாகவும், சமூகப் பணியில் விருப்பம் உள்ளவர்களாகவும் இருக்கின்றவர்களைப் போட வேண்டும் என்று நானே ஆணையிட்டிருக்கிறேன. அதற்குப் பிறகு நல்ல அநுபவம் உள்ளவர்கள்தான் இப்போது பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இந்தத் துறையைப் பொறுத்த வரையில் எதிர்காலத்தில் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு ஆர்வம் உள்ளவர்களையும், சமூகத் தொண்டு செய்கின்ற எண்ணம் உள்ளவர்களையும் நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

திரு. சீனி. செல்வராஜ் : பேரவைத் தலைவரவர்களே, விரைவாகவும், வேகமாகவும் செயலாற்றுவதற்கு அதிகமான இளைஞர்களை நியமிக்க வேண்டும். இப்போது அலுவலர்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால் இந்த இலாக்காவிலே வேலை மிகவும் மந்தமாக, தாமதமாக நடைபெறுகிறது. ஒய்வு பெறுகின்ற வயது உடையவர்களையும் மற்றவர்களையும் போடுவதை விடுத்து நல்ல இளைஞர்களையும், இள ரத்தங்களையும் போடுவதற்கும் அதன் மூலம் வேலை துரிதமாக செயல்படுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இருப்பவர்களை முதலில் நிரந்தரமாக்க வேண்டும். அதற்குப் பிறகு அதிகப்படுத்துகிற காரியத்தில் இறங்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் ''கோவில் சிறிது, கொட்டு முழக்கம் பெரிது'' என்று சொல்வார்கள். அதுபோல் நிரந்தரமான பணியாளர்களைக் கொண்டு தனியாக இயங்கினால் போதும். ஆறு மாடுகளை விநியோகிப்பதில் மூன்று தாலுக்காக்களுக்கு அதிகாரிகள் மாறுகிறார்கள். அதற்காக நிதி ஆதாரத்தை அதிகப்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காகத்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற வினாக்களை

எழுப்புகிறார்கள். இது நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரும். எதிர்காலத்தில் இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அவர் கருணை காட்டுவார் என்று நம்பலாம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சபையில் நான்கு ஐந்து மெம்பர்கள் ஜீப் கொடுக்கப்படுமா என்று கேட்டு விட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயில் இருந்து எந்தத் தகவலும் இதுபற்றி வரவில்லை. ஜீப் கொடுத்தால் வேக மாகவும், திறமையாகவும் நடப்பதற்கு சூழ்நிலை ஏற்படும். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நாம் கடந்த 2½ மாத காலமாக விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சட்டமன்றக் கூட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, என்னென்ன பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது பற்றி உறுப்பினர் களுக்குத் தெரியும். ஜீப்பிற்கு என்று நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே தான் மௌனம் சாதிக்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை அதிகாரி ஸ்தல விசாரணை செய்ய செல்லும்போது, ரெவின்யு அதிகாரிகள், முன்சீப், கர்ணம் போன்ற அதிகாரிகள் ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை என்றும், மதிப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. பணிகள் இதனால் காலதாமதம் ஏற்படு கின்றன. இதைப் போக்க என்ன ஆலோசனை செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு என்று நிரந்தரமான பணியாளர் களை நியமிக்கிற நேரத்தில் அவர்களுக்கு என்று தனித் தன்மை யும், தனி அதிகாரமும் வழங்கப்படும். அந்த நேரத்தில் எல்லா அதிகாரிகளும் தங்கள் கடமையைச் செய்வார்கள். அப்படியும் ஒத்துழைப்புத் தராத நிலைமை வருமானால், எதிர்காலத்தில் என்ன செய்யலாம் என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

ஊட்டியில் கலைக்கூடம்.

*வினா எண் 856—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கலை, பண்பாடுகளை விளக்கும் வகையில் ஊட்டியில் ஒரு கலைக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உளதா ?